(ஆ) வேலூருக்கு அருகில் பட்டுக்கோட்டை அழகிரி பேருந்திற்குள் சிலர் தீப்பந்தம் வீசி சேதம் ஏற்படுத்தியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தின்மீது சிலர் தீப்பந்தம் வீசி, அந்தப் பேருந்துக்கு சேதம் உண்டாக்க முயற்சித்து, (குறுக்கீடு) அங்கே இருந்த பயணிகள் பலர் தீக்காயத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று டாக்டர் ஜெ. பரந்தாமன், திரு .சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் (குறுக்கீடு) ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்)

அந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். திரு. பரந்தாமன். (குறுக்கீடு)

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

3. தகவல் கோரல்.

பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னொரு பிரச்சினையை எடுத்திருக்கிறேன். இன்னொரு உறுப்பினருடைய உரிமையைப் பறிக்கக்கூடாது. ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்று கூறி, ஒருசில உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, என்னிடம் எதுவும் கொடுக்காமல், இப்போதுதான் உள்ளே வந்து, எழுப்புகிறீர்கள். (குறுக்கீடு) மிக முக்கியமானதொரு பிரச்சினையை எழுப்புவதற்கு என்னிடம் சிலர் அனுமதி கேட்டு, நான் அனுமதி வழங்கி இருக்கிறேன். (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, தினசரி இந்த மாதிரி நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) நீங்கள் தாமதமாக வருவது, நான் ஸ்பெஷல் மென்ஷன் ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கின்றபோது, இந்த மாதிரிச் செய்வதை நான் அனுமதிப்பது இல்லை. (குறுக்கீடு) திரு. இளம்வழுதி, உட்கார வேண்டும். (குறுக்கீடு) அதற்குப் பதில் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) என்னிடம் எதுவும் சொல்லவில்லை. என்னிடம் எதுவும் சொல்லாமல், இன்னொரு ஸ்பெஷல் மென்ஷனை நான் எடுக்கின்றபோது, இந்த மாதிரிச் செய்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் எதுவும் சொல்லாமல் எழுப்புவது முறையல்ல. இன்னொரு பிரச்சினையை ஜீரோ ஹவரில் எடுக்கும்போது, இன்னொரு உறுப்பினருடைய உரிமையை

நீங்கள் பறிப்பது எப்படி நியாயம்? (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினருடைய பிரச்சினையை நான் எடுக்கும்போது, இந்தமாதிரி இடையூறு செய்யக்கூடாது. (குறுக்கீடு) திரு. திருநாவுக்கரசு, நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடு) என்னிடம் கொடுத்திருக்கிறீர்களா? அனுமதி, கேட்டிருக்கிறீர்களா? என்ன வேண்டுமானாலும் நீங்கள் கிளப்ப முடியாது. (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு)

(திரு. எஸ். திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்)

திரு. இளம்வழுதி, நீங்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறீர்கள். கடைசியில் சொல்லலாம், இது முடியட்டும்.

2. சிறப்புக் கவன ஈர்ப்பு — தொடர்ச்சி

(ஆ) வேலூருக்கு அருகில் பட்டுக்கோட்டை அழகிரி பேருந்திற்குள் சிலர் தீப்பந்தம் வீசி சேதம் ஏற்படுத்தியது குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதிக்கு அடுத்த தொகுதியான அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் நேற்று, 5.4.94 அன்று இரவு 9 மணி அளவில் சென்னையிலிருந்து அவருடைய சொந்த ஊரான ஒடுகத்தூருக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்தபோது, மலைக்கொடி மற்றும் உசிர் என்ற இடம் அருகே வெளியில் இருந்து சமூக விரோதிகள் சிலர் ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸின்மேல் வெடிக்கும் பொருள்களை வீசி, அது வெடித்த காரணத்தால், பேருந்தில் தீப்பந்தம் போன்ற பொருள் விழுந்து, பயணம் செய்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் உட்பட சுமார் 26 பேர் காயமுற்றனர். பலருக்குத் தீக்காயம் ஏற்பட்டது. இதில் இன்று காலையிலே இருவர் இறந்துவிட்டனர். மூவர் மிக அபாய நிலையில் உள்ளனர். பயணம் செய்த சட்டமன்ற உறுப்பினருக்கு வலது கையில் எலும்பு முறிவும், முதுகு எலும்பு, மார்பு எலும்பில் காயமும் ஏற்பட்டிருக்கிறது. இவர்களில் சட்டமன்ற உறுப்பினர் மட்டுமே அம்மாவின் அருளால் தீக்காயத்திலிருந்து தப்பியவர்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. கி. தருமலிங்கம் உட்பட அனைவரையும் வேலூர் அரசு மாவட்ட மருத்துவ மனையில் நேரில் சென்று பார்த்து, மருத்துவப் பணி இயக்குநர், மருத்துவ அலுவலர்கள், செவிலியர் ஆகியோர் இரவு நேரத்தில் மிகச் சிறப்பாக, காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி அளித்ததைப் பார்த்தேன். மேலும் உதவிட வேண்டிக் கேட்டுக் கொண்டேன். இந்த வெடி விபத்தின் உள் நோக்கம் ஆராயப்பட்டதா? டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில்